செ.வெ.எண்:62 நாள்:31.01.2018

# அரியலூர் மாவட்டம், பூவாணிப்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மனித நேய வார நிறைவு விழாவில் மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், பூவாணிப்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் **மனித நேய வார நிறைவு விழா** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில் மனிதநேய வாரவிழாவையொட்டி மாணவர்களிடையே நடைபெற்ற விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசியதாவது :-

மனித நேயத்தை ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் கடைவிடிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக மனிதநேய வார விழா அரசு சார்பில் நடத்தப்படுகிறது.

வாடிய பயிரைக் கண்டு மனம் வாடிய வள்ளலார் மற்றும் புத்தர், பாரிவள்ளல், பேகன் போன்றவர்களின் வாழ்க்கையில் மனித நேயம் போற்றப்பட்டதை வரலாறு என்றும் போற்றிக் கொண்டிருக்கிறது. அன்பு, கருணை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகளை ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் பின்பற்றி மனிதநேயம் போற்றப்பட பாடுபடவேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ப.டினாகுமாரி, தனி வட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலத்துறை ம.கலைவாணன், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் அ.முத்துக்குமரவேல் (பூவாணிப்பட்டு), க.இரத்தினம் (வெத்தியார்வெட்டு), சி.இராஜேந்திரன் (விளந்தை) மற்றும் அலுவலர்கள், ஏராளமான மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டார்கள்.

முன்னதாக, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.இளங்கோ அனைவரையும் வரவேற்று பேசினார். முடிவில், தனி வட்டாட்சியர் (உடையார்பாளையம்) இரா.தேன்மொழி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.